மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

அசல் வழக்கு எண்.13/2014

வாக்குமூலம். பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேலு | ஜாதி | |
| த/பெ. | நாகு தேவர் | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| தாலுகா | | வயது | 73 /2023 |

1873-ம் வருடத்து 10-ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 31.07.2023-ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் உன்னாமலை அம்மாள், சுப்பிரமணியன் அவர்களிடமிருந்து கிரையம் வாங்கினேன். உன்னாமலை அம்மாள், சுப்பிரமணியன் ஆகியோர் 3-ம் பிரதிவாதி சுப்பையாவிடமும், அவரது தாயார் சிவகாமி அம்மாளிடமிருந்தும் கிரையம் வாங்கினார்கள். எனது கிரைய முன்பாத்தியஸ்தர்கள் 3-வது பிரதிவாதியிடமும், அவரது தாயாரிடமிருந்தும் 31 செண்ட் கிரையம் வாங்கியிருக்கிறார்கள். 3-ம் பிரதிவாதிக்கும், அவரது தாயாருக்கும் மொத்தம் 50 செண்ட் பாத்தியம் என்றாலும், அதில் மேல்புறம் 31 செண்டை உன்னாமலைக்கும், சுப்பிரமணியனுக்கும் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். கீழ்புறம் 3-ம் பிரதிவாதி சுப்பையா பிள்ளைக்கு 19 செண்ட் பாத்தியம் என்றால் சரியல்ல கீழ்புறம் 5 செண்ட் தான் பாத்தியம். எனக்கு சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம், R.S.மங்கலம் ஆகும்.

2) தாவா பிராதில் புலஎண் சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. நான்கெல்லை மட்டும் தான் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்தை பூஸ்துதியில் அடையாளம் காண முடியாது என்றால் சரிதான். நான் எதனடிப்படையில் கட்சி செய்கிறேன் என்றால் நான் கிரையம் வாங்கியதன் அடிப்படையில் கட்சி செய்கிறேன். எனக்கு அறந்தாங்கியில் வேறு இடம் கிடையாது என்றால் சரிதான். நான் எதனால் அறந்தாங்கியில் இடம் வாங்கினேன் என்றால் நான் பூவைமாநகரில் ஆசிரியராக இருந்ததால் அறந்தாங்கியில் இடம் வாங்கினேன். நான் தற்சமயம் காரைக்குடியில் இருக்கிறேன். எனக்கு அறந்தாங்கியில் வீடு இல்லை என்றால் சரிதான். எனக்கு கிரையம் கொடுத்த பி.வா.சா.ஆ.2 ஆவணம் கிரையம் பெறுவதற்கு முன் அதன் மூல ஆவணத்தை வாங்கிப் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி ஆவணத்தின் மூல ஆவணத்தை சான்றிட்ட நகல் பெற்று பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

மேற்படி மூல ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. என்னுடைய கிரைய ஆவணத்தில் மட்டும் தான் தாக்கல் செய்திருக்கிறேன்.

3) 3-ம் பிரதிவாதி சுப்பையா பிள்ளையின் கட்சியை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். என்ன கட்சி செய்திருக்கிறார் என்றால் வாதியின் வழக்குரை செல்லாது என்று கட்சி செய்திருக்கிறார். புலஎண்.106 மற்றும் 107 ஆகிய புலஎண்களை 3-ம் பிரதிவாதி குப்பம்மாள் என்பவரிடமிருந்து 08.04.1952 தேதியில் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி 08.04.1952 தேதிய கிரைய ஆவணத்தை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். மேற்டிப கிரைய ஆவணத்தில் 206/106, 206/107 ஆகிய புலஎண்களை கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் எனக்கு 206/106 மட்டும் தான் ஞாபகம் இருக்கிறது. 3-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை எப்போது நகல் எடுத்துப் பார்த்தேன் என்றால் மூன்று மாதத்திற்கு முன்னால் பார்த்தேன். மேற்படி 08.04.1952 தேதிய கிரைய ஆவணத்தில் வாரிக்கு தெற்கு, செல்லையா பிள்ளை, சுப்பிரமணிய பிள்ளை புஞ்சைக்கு கிழக்கு, வீரப்ப பிள்ளை புஞ்சைக்கு வடக்கு, காத்தாயி அம்மாள் புஞ்சைக்கு மேற்கு என்ற நான்கெல்லை தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) மேற்படி நான்கெல்லைக்கு உட்பட்ட 150 குழி விஸ்தீர்ணத்தை 08.04.1952-ம் தேதி 3-ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். பொதுவாக 3 குழி விஸ்தீர்ணம் என்பது 1 செண்ட் விஸ்தீர்ணத்திற்கு ஈடானது என்றால் சரிதான். அதனால் மேற்படி 08.04.1952 தேதிய கிரைய ஆவணப்படி 3-ம் பிரதிவாதி மொத்தம் 50 செண்ட் கிரையம் வாங்கியிருக்கிறார் என்றால் சரிதான். அந்த 50 செண்டில் தான் உன்னாமலை சுப்பிரமணியனுக்கு 31 செண்ட் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி 50 செண்டானது புலஎண்.206/106 விஸ்தீர்ணம் 36 செண்ட் ஆகவும், புலஎண்.206/107 விஸ்தீர்ணம் 14 செண்ட் ஆகவும், உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புலஎண்.206/106-ல் கண்ட 36 செண்ட் விஸ்தீர்ணத்தில் தான் 31 செண்ட் விஸ்தீர்ணம் 3-ம் பிரதிவாதி எனது கிரைய முன்பாத்தியஸ்தர்களுக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மீதம் 206/106-ல் கண்ட 5 செண்ட் விஸ்தீர்ணம் மற்றும் புலஎண்.206/107-ல் கண்ட 14 செண்ட் விஸ்தீர்ணம் ஆகக்கூடுதல் 19 செண்ட் விஸ்தீர்ணம் 3-ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் சரிதான்.

5) 3-ம் பிரதிவாதிக்கு மேற்படி விஸ்தீர்ணத்துக்கும், கீழ்புற சொத்தைப் பொறுத்தும் நகர நிலஅளவையின் கீழ் கூட்டுப்பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் 3-ம் பிரதிவாதி 19 செண்ட் அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு கிரையம் கொடுத்தது போக மீதமுள்ள 5 செண்ட் அவர் அனுபவத்தில் தான் உள்ளது. கீழ்புற செண்டை பற்றி எனக்கு தெரியாது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், கீழ்புற சொத்தையும் சேர்த்து மொத்தம் 19 செண்ட் 3-ம் பிரதிவாதி அனுபவத்தில் இருக்கிறது

என்றால் சரியல்ல. எனக்கு அதுபற்றி தெரியாது. நானும் எனது மனைவியும் சேர்ந்து மொத்தம் 15 செண்ட் கிரையம் வாங்கினோம். எனது மனைவி தற்போது இறந்துவிட்டார். என் மனைவிக்கு எனது பிள்ளைகளும் வாரிசுகள் தான் என்றால் சரிதான். என் மனைவி கிரையம் பெற்ற சொத்தை நானும் எனது பிள்ளைகளும் சேர்ந்து அனுபவிக்கிறோம் என்றால் சரிதான். எனது பிள்ளைகளை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்க நான் மனு கொடுக்கவில்லை என்றால் எனது பிள்ளைகள் என் பேருக்கு பட்டா மாற்றம் செய்ய ஒப்புதல் கொடுத்துவிட்டார்கள்.

6) எனது பிள்ளைகளை நான் தாவா வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 3-ம் பிரதிவாதி அனுபவம் செய்யும் இடத்தில் வாதிக்கு எந்தப் பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். எனக்கே தெரிந்த காரணத்தினால் 3-ம் பிரதிவாதி 19 செணட் அனுபவிப்பது பற்றி எனக்கு தெரியாது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.